இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 47 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 10 – வெள்ளிக்கிழமை 26 செப்டம்பர் 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 47 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 10 - Friday 26 September 2025 - Madurai 16 Pages ₹ 5.00


## நேரு உள்விளையாட்டரங்கில்

# ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ மாபெரும் விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி பங்கேற்றனர்!

**சென்னை, செப். 26-**

**“கல்வியில் சிறந்த தமிழ்நாடு” தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டம் 2025-26 கல்வியாண்டிற்கான ’புதுமைப் பெண்’ மற்றும் ’தமிழ்ப் புதல்வன்’ திட்டங்கள் சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நேற்று (25.9.2025) மாலை 4.00 மணியளவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களும் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தெலுங்கானா முதலமைச்சர் அ.ரேவந்த் ரெட்டி அவர்களும் தொடங்கி வைத்தனர்.**

சமூகநீதியை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு அரசு, கல்வி அனைத்துத் தரப்பினருக்கும் சென்று சேரவேண்டும் என்கிற நோக்கத்தோடு அரசுப் பள்ளியில் பயின்று கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண்’ என்கிற திட்டத்தின்கீழும், மாணவர்களுக்கு ‘தமிழ்ப் புதல்வன்’ என்கிற திட்டத்தின்கீழும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறது.

2025-26 கல்வி ஆண்டிற்கான “புதுமைப்பெண் - தமிழ்ப் புதல்வன்” திட்டங்களின் தொடக்க விழா நேற்று (25.9.2025) மாலை 4.00 மணியளவில் சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியை ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்னும் கருப்பொருளில் கொண்டாடும் இவ்விழாவில் தலைமையேற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தெலங்கானா முதலமைச்சர் அ. ரேவந்த் ரெட்டி அவர்களும் திட்டங்களை தொடங்கி வைத்தனர். இவ்விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகித்தார்.

தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டமாக இவ்விழா மாலை 4 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெற்றது.

கல்வி சார்ந்த 5 முக்கிய திட்டங்களையும் சாதனைகளையும் முன்னிலையாக வைத்து இவ்விழா 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.

முதல் பகுதியாக தமிழ்நாட்டு மக்களின் மனதுக்கு நெருக்கமானத் திட்டமான “முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்” இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து “நான் முதல்வன்”, “விளையாட்டுச் சாதனையாளர்கள்”, “புதுமைப் பெண்-தமிழ்ப் புதல்வன்” மற்றும் “அரசுப் பள்ளிகளிலிருந்து முதன்மை உயர்கல்வி நிறுவனங் களுக்குச் சென்ற சாதனையாளர்கள்” ஆகிய அரங்கங்கள் நடைபெற்றன.

இவ்வரங்கங்களில் இத்திட்டங்களால் பயன்பெற்றவர்கள், இத்திட்டத்தின் மூலம் சாதித்தவர்கள், அவர்களுக்குத் துணை நின்றவர்கள், ஆசிரியர்கள், நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் அனுபவங்களையும் தங்கள் வாழ்வில் இத்திட்டங்களின் தாக்கத்தையும் பகிர்ந்து கொண்டனர்.

இதன் பிறகு முதலமைச்சர் அவர்களும் தெலங்கானா முதலமைச்சர் அவர்களும் இணைந்து 2025-26-ஆம் ஆண்டிற்கான “புதுமைப்பெண்-தமிழ்ப் புதல்வன்” திட்டங்களைத் தொடங்கி வைத்தனர். இந்த ஆண்டு இத்திட்டத்தின் மூலம் 2.57 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்குத் தொடர்ந்து பங்காற்றி வரும் சமூக சிந்தனையாளர்கள், சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியர்கள், பயிற்றுனர்கள், கல்வி அமைப்புகளின் நிர்வாகிகள் ஆகியோர் பாராட்டிச் சிறப்பிக்கப் பட்டனர்.

இவ்விழாவில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் ஆகியோர் மற்றும் மேயர், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் பலர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.9.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், திருச்சி மாவட்டம் – முசிறி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார்.

## காஸா விவகாரம் : மனிதநேயத்தை மறந்துவிட்ட மோடி அரசு!

### சோனியா காந்தி குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, செப்.26-**

**“பாலஸ்தீன பிரச்சினையில் இந்தியாவின் மவுனம் மனிதநேயத்தை கைவிடுவதற்கு சமமாகும்” என்று காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.**

இஸ்ரேல் – பாலஸ்தீன மோதல் குறித்து ‘தி இந்து’ ஆங்கில நாளிதழில் சோனியா காந்தி கட்டுரை எழுதியுள்ளார்.

அதில், பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதாக பிரான்ஸ், பிரிட்டன், கனடா, போர்ச்சுகல், ஆஸ்திரேலியா நாடுகள் அண்மையில் அறிவித்திருப்பதை சுட்டிக் காட்டியுள்ளார். ஐ.நா. சபையில் உள்ள 150க்கும் மேற்பட்ட நாடுகள் பாலஸ்தீனத்தை அங்கீகரித்திருப்பதாக கூறிய அவர், இதற்கெல்லாம் முன்னோடியாக 1988ல் இந்தியா



பாலஸ்தீனத்தை அங்கீகரித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக ஐநாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுக்கு இந்தியா ஆதரவு அளித்தது கடந்தகால வரலாறு என்று சோனியாகாந்தி குறிப்பிட்டுள்ளார். ஆனால் தற்போதைய இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சினையில் இந்தியாவின் ஆழ்ந்த மவுனம் காப்பது கவலை அளிப்பதாக கூறியுள்ளார்.

இது பாலஸ்தீனத்துடனான உறவில் மேலும் பிரிவை உண்டாக்கும் என்பதுடன், மனிதாபிமானம் மற்றும் நீதிநெறிகளில் இருந்து இந்தியா விலகிச் செல்வதாகவும் சாடியுள்ளார். இந்தியாவின் அரசியலமைப்பு மதிப்புகள் மற்றும் நலன்களைவிட, பிரதமர் மோடி மற்றும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுக்கும் இடையிலான தனிப்பட்ட நட்பு அடிப்படையில் அரசின் நடவடிக்கைகள் இருப்பதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

எனவே, பாலஸ்தீனத்தில் மனித உரிமைகளை பாதுகாக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இந்தியா ஆதரவாக இருக்க வேண்டும் என்றும் சோனியா காந்தி வலியுறுத்தியுள்ளார்.

## மோடி ஆட்சியில் கடும் சரிவை சந்தித்த ரூபாய் மதிப்பு!

*புதுடெல்லி, செப்.26-*

*பிரதமராக மோடி 26.05.2014ல், பதவியேற்ற போது, டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ.58.58 அப்போது ரூபாயின் மதிப்பு வலுவடைந்து, ரூ.40ஐ எட்டப்போகிறது என போலியான பிம்பத்தை பா.ஜ.க.வினர் உருவாக்கினர். ஆனால், அதற்கு நேர்மாறாக படுவீழ்ச்சியை சந்தித்து வந்தது ரூபாய் மதிப்பு.*

*மோடியின் முதல் 5 ஆண்டுகால ஆட்சியில், டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு ரூ.69.98 10 ஆண்டுகால ஆட்சியில் ரூ.85.27 தற்போது ரூ.88.71 என வரலாறு காணாத வீழ்ச்சியை சந்தித்துள்ளது.*

*இதுநாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பை 70,400 கோடி டாலரில் இருந்து 68,200 டாலராக குறைத்தது. டிரம்ப் ஆட்சிக்காலத்தில், டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு ரூ.87 முதல் ரூ.92 வரை சரியலாம் என எஸ்.பி.ஐ கணிப்பு வெளியிட்டிருந்தது.*

*ஆனால், தற்போதைய சூழலில் டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு ரூ.100ஐ தாண்டும் என கூறப்படுகிறது. வாஜ்பாய் ஆட்சியில் ரூபாய் மதிப்பு ரூ.45ஆக இருந்தது. அதன் பிறகு ஆட்சிப் பொறுப்பேற்றார் மன்மோகன் சிங். அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பை ரூ.41ஆக உயர்த்தினார் மன்மோகன் சிங். 2008ல் உலக பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது தான், ரூபாய் மதிப்பு ரூ.48 ஆக சரிந்தது.*

*2008ல் ரூ.48ஆக இருந்த ரூபாய் மதிப்பு, மோடி ஆட்சியில் தற்போது ரூ.88ஆக சரிந்துவிட்டது. ரூபாய் மதிப்பு சரிவு என்னென்ன பாதிப்புகள் ஏற்படும் ரூபாய் மதிப்பு சரிவால் இறக்குமதி பொருட்களின் விலை அபரிமிதமாக உயர்வை சந்திக்கும். வெளிநாட்டில் படிக்கும் இந்திய மாணவர்கள் கல்விக் கட்டணத்துக்கு அதிக தொகை செலுத்த வேண்டி வரும். விமானம், ஓட்டல்களுக்கு டாலரில் செலுத்த வேண்டிய சூழலை சுற்றுலாப் பயணிகள் சந்திக்க நேரிடும் ரூபாய் மதிப்பை உயர்த்த ஒன்றிய பா.ஜ.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.*

### தமிழ்நாட்டுப் பகுதியில் உள்ள

## இந்தியாவின் முதல் கடற்பசுப் பாதுகாப்பகத்துக்கு உலகளாவிய அங்கீகாரம் !

### ‘திராவிட மாடல்’ அரசின் சாதனை என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

*சென்னை, செப்.26-*

*‘திராவிட மாடல்’ அரசு அறிவித்த இந்தியாவின் முதல் கடற்பசுப் பாதுகாப்பகத்துக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைத்துள்ளதாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் தெரிவித்துள்ளார்.*

*அழிந்துவரும் நிலையில் உள்ள மிக அரிதான கடற்பசு இனத்தையும், அதன் கடல் வாழ்விடங்களையும் பாதுகாக்கும் பொருட்டு மன்னார் வளைகுடா, பாக்விரிகுடா பகுதியில் கடற்பசு பாதுகாப்பகம் அமைக்கப்படும் என்று*



*தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.*

*அதன்படி, 448 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளை உள்ளடக்கிய பாக். விரிகுடாவில் கடற்பசு பாதுகாப்பகம் அமைக்கப்படுகிறது.*

*இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில்தான் கடற்பசு பாதுகாப்பகம் அமைக்கப்படுகிறது.*

*இந்நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், திராவிட மாடல் அரசு அறிவித்த இந்தியாவின் முதல் கடற்பசுப் பாதுகாப்பகத்துக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைத்துள்ளதாக பெருமிதம் தெரிவித்துள்ளார். இந்த முன்னோடி முயற்சியைப் பாராட்டும் தீர்மானம் அபுதாபி IUCN World Conservation Congress முன் ஆன்லைன் வாக்கெடுப்பில் நிறைவேற்றப்பட்டது. இந்த முயற்சியில் பங்கேற்ற தமிழ்நாடு வனத்துறை, Omcar Foundation உள்ளிட்ட அனைவருக்கும் பாராட்டுகள் என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.*